செ.வெ. எண்: 93 நாள் : 28.01.2011.

**<u>தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் சார்பில்</u>**
**<u>2009–2010ஆம் ஆண்டிற்கான பங்கு ஈவுத் தொகை</u>**
**<u>15 கோடியே 89 இலட்ச ரூபாய்!</u>**

**<u>முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம்</u>**
**<u>தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் வழங்கினார்!</u>**

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) கடந்த 2009–2010ஆம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்கின்படி, 22 கோடியே 93 இலட்ச ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது. இதில், தமிழக அரசுக்கு ஆதாயப் பங்குத் தொகை, முன்மொழிதல் கட்டணம் ஆகிய இனங்களில் மொத்தம் 15 கோடியே 89 இலட்ச ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் தகவல் தொழில்நுட்பவியல்துறை அமைச்சர் திருமதி பூங்கோதை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர் திரு.பி.டபிள்யூ.சி. டேவிதார், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.சந்தோஷ்பாபு, இ.ஆ.ப., ஆகியோர் உடன் இருந்தனர்.

* * *

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.